1498

# கல்லூரிக் கல்வித் துறை

அனுப்புநர்

முனைவர்.(திரு).சி. பூரண சந்திரன்,
எம்.சி.ஏ., எம்.ஃபில்., பிஎச்.டி.,
கல்லூரிக் கல்வி இயக்குநர்,
கல்லூரிக் கல்வி இயக்ககம்,
சென்னை – 6.

பெறுநர்

1.அனைத்து மண்டலக் கல்லூரிக் கல்வி இணை இயக்குநர்கள்.
2. அனைத்து முதல்வர்கள், அனைத்து அரசு கல்லூரிகள்.

ந.க.எண்.5738/எம்1/2020 நாள் 26.08.2020

அய்யா /அம்மையீர்,

பொருள்: கல்லூரிக் கல்வித் துறை – 2020–21–ம் கல்வியாண்டு – இளங்கலை மாணவர் சேர்க்கை – நடவடிக்கை மேற்கொள்ளுதல் – தொடர்பாக.

பார்வை:
1. அரசாணை (வாலாயம் ) எண்.77, உயர் கல்வித்(ஜி1)துறை நாள். 18.07.2020.
2. அரசாணை (வாலாயம் ) எண்.77, உயர் கல்வித்(ஜி1)துறை நாள். 18.07.2020.
3. இவ்வலுவலக கடித ந.க.எண்.5738/எம்.1/2020 நாள்.07.08.2020.

---------

2020–21–ம் ஆண்டிற்கான மாணவர் சேர்க்கையினை துரிதப்படுத்தும்விதமாக, இணையதளம் வாயிலாக மாணவர்களுக்கு பாடங்களை போதிப்பதற்கு ஏதுவாக மாணவர் சேர்க்கை தொடர்பான பணிகளை ( தர வரிசை மற்றும் தெரிவு பட்டியல் வெளியிட்டு மாணவர் சேர்க்கையினை உறுதிப்படுத்துதல் ) உடனடியாக மேற்கொள்ளுமாறும், 31.08.2020 முதல் முதலாமாண்டு மாணவர்களுக்கு இணையதள வகுப்புகளை தொடங்க வேண்டும் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

கல்லூரி முதல்வர்கள் 2020–21–ம் ஆண்டிற்கான மாணவர் சேர்க்கை விவரங்களை பாடவாரியாக அந்தந்த மண்டல இணை இயக்குநர்களுக்கு ஒவ்வொரு நாளும் ( Daily Report ) தெரிவிக்க வேண்டும்.

அனைத்து மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர்களும் மாணவர் சேர்க்கை தொடர்பாக உரிய அறிவுரைகளை அனைத்து கல்லூரி முதல்வர்களுக்கும் தெரிவித்து அன்றாடம் சேர்க்கப்படும் மாணவர்கள் குறித்த எண்ணிக்கையை ஒருங்கிணைத்து ( Consolidated ) Excell வடிவில் இவ்வலுவலகத்திற்கு அனுப்ப வேண்டும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் கடந்த கல்வியாண்டில் ( 2019–2020 ) பெறப்பட்ட கல்விக் கட்டணத்தையே நடப்பு ( 2020–2021) கல்வியாண்டிலும் மாணவர்களிடமிருந்து பெறப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கலாகிறது.

கல்லூரிக் கல்வி இயக்குநர்.